Registered as a News Paper     பக்கங்கள் 04     விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     PEOPLES DAILY     மக்கள் தினசரி

நாதம்: 02     திருவள்ளுவர் ஆண்டு 2022     ஆவணி 27     ( 12 - 09 - 1991 )     வியாழக்கிழமை     ஓசை: 206

## கிராமசேவகர்களை சந்திக்க அரசாங்க அதிபர் தயக்கம்

வவுனியா மாவட்ட கிராமசேவையாளர்கள் அரசாங்கஅதிபரைச் சந்திப்பதற்குப் பிரயத்தனம் செய்கின்ற போதிலும் அவர்களின் ஆசை நிராசையாகிறது என்று அறியப்படுகிறது. தற்போது திரு மார்க்கண்டு என்பவர் வவுனியா அரசாங்க அதிபராகப் பணி புரிந்து வருகிறார். இவர் இதுவரையில் கிராமசேவையாளர் எவரையும் கடமைநேரத்தில் சந்திக்கவில்லையாம் உதவி அரசாங்கஅதிபர்களோடு மட்டுமே தமது தொடர்பைக் குறுக்கிவைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாகவவுனியா மாவட்ட கிராமசேவை யாளர்கள் அரசாங்கஅதிபரின் தொடர்பு அற்ற நிலையில் பணிபுரிகிறார்கள் என்றுகூறப்பட்டது. (தி)

# சிறிலங்கா - இந்தியா இணைந்து புலிகளை ஒடுக்க புதிய திட்டம்

## ஹேரத் முன் மொழிந்ததாக இந்திய அமைச்சர் தகவல்

(டில்லி)

விடுதலைப் புலிகளை முற்றிலும் ஒடுக்குவதற்கான நடவடிக்கை ஒன்றை இந்தியாவும்–சிறிலங்காவும் இணைந்து மேற்கொள்ளும் திட்டம் ஒன்றை சிறிலங்கா அரசாங்கம் முன் மொழிந்துள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் எட்வேர்ட் பொலதிரோ இந்திய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் செய்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹரத்தே இத்திட்டத்தை முன்மொழிந்ததாகவும் இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் தெரிவித்தார்.

இத்திட்டத்தை இலங்கை அரசு அதனை ஆராயும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அத்துடன் புலிகளுக்கு எதிராக இந்திய மண்ணில் நடவடிக்கை எடுப்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைக்

கூட்டு ரோந்து நடத்தும் திட்டமொன்றை சிறிலங்கா பலதடவை முன்வைத்தும் இந்தியா இதற்கான சம்மதத்தைத் தெரிவிக்கவில்லை. அத்தோடு சார்க் மாநாடுகளின் போது இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து சிறிலங்கா பேசி வந்துள்ளது. ஆனால் இந்தியா அதற்கு சாதகமான பதில் எதுவும் அறிவிக்கவில்லை.

## புலிகள் தொடர்பாய் பேச

## லலித் குழுவினருக்கு குருநாகலை, இரத்தினபுரி பிரதேசசபைகள் ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆதரவாக தென்பகுதியின் உள்ளூர் அமைப்புக்கள் பல அறிக்கை வெளியிட்டுள்ளன.

இரத்தினபுரி பிரதேசசபை, குருநாகல் பிரதேசசபை, ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் படைவீரர்களின் அமைப்பு ஆகியனவும், சிங்கள அமைப்பைச் சேர்ந்த எட்மன் பனாகொடையும் ஆதரவான பிரேரணைகளை நிறைவேற்றியுள்ளதுடன் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளன.

## எம்மை வெளியேற்றிய முறை உலகில் எங்கும் நடக்காதது

**- லலித் அத்துலத் முதலி**

(கொழும்பு)

"எம்மைக் கட்சியிலிருந்து வெளியேற்றியது போன்ற ஒரு சம்பவம் உலகில எந்த நாட்டிலும் இதுவரை நடைபெறவில்லை" என்று முன்னாள் அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

கட்சி அங்கத்தவர்களை

மேலும் பாராளுமன்றஉறுப்பினர்கள் சுதந்திரமாக இயங்க முடியாதவாறு அவர்களது உரிமைகளைஜனாதிபதி பறித்துள்ளார். பாராளுமன்றஉறுப்பினர் ஒருவர் ஒரு திணைக்களத் தலைவருக்கு அல்லது உதவி அரசாங்க அதிபருக்கு அல்லது அரசாங்க அதிபருக்கு

ரைச் சந்திக்க முடியாது என்றும் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதி ஜனாதிபதி குறிப்பிடும் அபிவிருத்தித்திட்டத்திற்கே பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதியிடமே உண்டு என்றும் அவர் தெரி

கட்சி அங்கத்தவர்களை அக்கட்சியில் இருந்து நீக்குவதற்குக் கையாளப்படும் வழமையான நடைமுறைகள் எதுவும் எமது விடயத்தில் கைக்கொள்ளப்படவில்லை என்றும் முன்னாள் நிதி அமைச்சர் ரொனிடிமெல்லைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஏழு மாதங்கள் விசாரணை நடைபெற்றதாகவும், அவரை வெளியேற்றுவது தொடர்பான குழுவில் தானும் அங்கத்துவம் வகித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அல்லது அரசாங்க அதிபருக்கு கடிதம் எழுத அல்லது அவ

உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தை இலங்கை அரசு கொடுத்ததும் இந்திய

புலிகள் இயக்கத் தலைமைத் தளபதி திரு பிரபாகரனைக் கைது செய்யும்படி இந்தியாவிடம் ஒப்படைக்கும் கோரிக்கை இப்போதைக்கு இந்தியா முன்வைக்காது என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் இனப்பிரச்சினை ஆரம்பத்தில் இருந்து பாக்கு நீரிணைப் பகுதியில்

## சவான் தமிழகம் வருகிறார்

விடுதலைப்புலிகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி பேசுவதற்காக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் வார இறுதியில் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

அவர் தமிழக முதலமைச்சரைச் சந்திப்பார் என்றும் தமிழகப் பொலிசாருக்கு 750 ஏ. கே 47 ரகத் துப்பாக்கிகளையும் ஏனைய ஆயுதங்களையும் பெறும் விடயம் முக்கியமாக ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

# நுகேகொட வன்முறைக்கு லலித் குழுவே காரணம்

## —சிறிலங்கா அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான நுகேகொடப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களுக்கு லலித் குழுவினரே காரணமென்று அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அண்மையில் வெளியேற்றப்பட்ட எட்டு எம்பீக்கள் கலந்து கொண்ட பிரசாரப் பொதுக் கூட்டமொன்று நேற்று முன்தினம் நுகேகொடயில் இடம்பெற்ற போது அசம்பாவித சம்பவங்கள் வெடித்தன. பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்த சமயம் திடீரென மேடைமீது தாக்குதல் முயற்சி நடந்தது. மேடையருகே துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதைத்தொடர்ந்து திரண்டிருந்த மக்கள் வெருண்டு ஓடினர். இதே சமயம் கடைகள் சிலவற்றுக்கும் தீ வைக்கப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் இரண்டாவது வாரமாக

# குண்டுவீச்சு, எறிகணைத்தாக்குதல் மத்தியிலும் கடும் மோதல்

(தமது நிருபர்)

மணலாறு காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்ச்சியான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன இம் மோதல்களில் இருதரப்பிலும் உயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா விமானப்படை விமானங்களும் உலங்கு வானூர்திகளும் தொடர்ந்தும் கடும் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவண்ணமுள்ள அதே வேளையில் கடற்படைக் கப்பல்களிலிருந்தும் முகாம்களில் இருந்தும் கடும் பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல் தொடர்பாக செய்தி வெளியிட்ட சிறிலங்கா இராணுவ தரப்பினர் புலிகளின் நிலைகளைத் தாம் கடுமையாகத் தாக்கியதாகவும் நேற்றைய முன்தின மோதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தது.

# வாக்குறுதிக்கு மாறாக ஐ. தே. கட்சி நடக்கிறது

## —காமினி

(கொழும்பு)

மக்களுக்கு ஜனநாயக உரிமைகளும் சுதந்திரமும் அளிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்துத்தான் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆனால் நாட்டில் ஒரு நபர் ஆட்சியும் சர்வாதிகாரமும் ஏற்பட்டு விட்டது என்றும் காமினி திசநாயக்கா தெரிவித்தார்.

நுவரேலியாவில் விகாரை ஒன்றில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய காமினி திசநாயக்கா ஒரு நபர் ஆட்சியை நீக்க இதுவே தகுந்த தருணம் என்றும், மக்கள் உடனடியாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்ற சூழல் இது தான் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற மற்றும் மக்களின் உரிமைகள் மீட்கப்படும் வரை சர்வாதிகாரத்திற்கு எதிரான போராட்டம்தொடரும் என்று ஐ தே க. வில் இருந்து வெளியேற்றப்பட்ட எட்டு எம். பிக்களும் ஒருமித்து தெரிவித்துள்ளனர்.

இக் கூட்டத்திற்கு இருபதினாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரைத் தொடர்ந்து பேசிய மத்திய மாகாணசபை உறுப்பினரும் இலங்கைதேசிய தோட்ட தொழிலாளர் யூனியன் உதவிச்செயலாளருமான வி புத்திரசிகாமணி பேசுகையில்திரு காமினி திசாநாயக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் 7 எலும்புக் கூடுகள் கிணற்றிலிருந்து மீட்பு

(மண்டைதீவு)

மண்டைதீவில் இரண்டு கிணறுகளையும் நேற்றுத் தொடர்ந்தும் தோண்டிய போது மேலும் ஏழு பேருடைய எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மற்றும் உடுப்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் தோண்டியபோது இதே கிணறுகளில் எட்டு எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டது தெரிந்ததே

(88)

# இறந்த தொகை ஆறு; காணாமற்போனது ஏழு

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தின் உள்ள தாண்டிக்குளம் என்ற இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஏழு இராணுவத்தினரைக் காணவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் அறிவித்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை காலை தாண்டிக்குளத்திற்குச் சமீபமாக இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிரு

(4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறு மோதலில் 10 புலிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் 09-09-91 அன்று ஏழு புலிகள் வீரமரணமடைந்தனர்.

★ செல்வரூபி (பொன்னையா காளியம்மா, பன்குடாவெளி, இலுப்பையடிச்சேனை, மட்டக்களப்பு)

★ திலீப் (மார்க்கண்டு இளங்கீரன், சிவன்கோவில் வீதி, ஆவரங்கால், புத்தூர்)

★ சாந்தினி (நாகலிங்கம் ஜெகசோதி, தம்புலுவில், அம்பாறை)

★ மலைமகன் (பிள்ளையான் வளர்மதி. பாடசாலை வீதி, கிரான், மட்டக்களப்பு)

(4 ஆம் பக்கம் பார்க்க)

# துணை வேந்தர் துரைராசாவிற்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக கடந்த மூன்றாண்டுகள் கடமையாற்றி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உபவேந்தராக நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை வெள்ளிக்கிழமை (13-09-91) பி.ப. 2·45 மணிக்கு நடைபெறும் மேற்படி விழாவுக்கு கலாநிதி க. பரமேஸ்வரன் தலைமை தாங்குகிறார்:

# புலிகளுக்கு ஆதரவான 130 பேர் இதுவரை கைது

(சென்னை)

புலிகளுக்கு ஆதரவாக நடக்கும் பொதுக் கூட்டங்களைத் தடுக்கும் முயற்சியில் தமிழகப் பொலிசார் இதுவரை நூற்று முப்பதுபேரைக் கைது செய்துள்ளனர்.

புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களை தமிழக அரசு தேசிய பாதுகாப்புசட்டத்தின் கீழ் (என் எஸ்.ஏ கைது செய்யும் என்றும், புலிகளைப் புகழ்ந்து பிரசாரம் செய்பவர்களும் இதே தண்டனைக்கு உள்ளாவர் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா எச்சரித்துள்ளார்.

இதேவேளை ''ராஜீவ் காந்தியை கொல்வதில் என்ன தவறு'' ''சோனியா விதவையானதில் என்ன தவறு''என்ற கோஷங்கள் அடங்கிய சுவரொட்டிகள் மதுரை போன்ற பிரதான நகரங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை?

விடுதலைப் புலிகளின் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்வதுபற்றிய யோசனையை இந்திய அரசாங்கம் பரிசீலனை செய்துவருகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்திலும் கர்நாடகத்திலும் கடத்தல் மற்றும் முயற்சிகளில் புலிகள் ஈடுபட்டதனாலும் ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகலிடம் அளிக்கப்பட்டதாலும் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

# காமினி வித்தியாலயத்தில் பல்கலைக் கழக கல்லூரி

(கொழும்பு)

வவுனியாவில் அமைக்கப்படும் பல்கலைக்கழக கல்லூரி காமினி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கல்லூரி அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ளதாகவும், இதற்கென இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மீண்டும் பிறவடா!

மகனே! - நீ
மீண்டும் மீண்டும
பிறந்து வா - எமது
பண்டைய மண்ணில்...
- ஆனால்
அத்தனை பிற பிலும்
வீரப் புலியாகவே
பிறவடா!

—வ ஞ்ஸ்நாதன்

## ஆதாரம் காட்டி மாநகரசபையில் பெறவும்

(ஈச்சமோட டை)

நடைபெற்று முடிந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவ காலங்களின் போது பொதுமக்களால் கைதவறி விடப்பட்ட பொருள்களான கைக்கடிகாரங்கள், காற்சங்கிலி, பணப்பேர்ஸ், அடையாள அட்டை போன்ற பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு நல்லூர் பண்டாரமாளிகை வளவினுள் அமைந்திருக்கும் யாழ் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்படி பொருள்களை கைதவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார் (43)

## ஜோர்ஜியாவில் முஸ்லிம்கள் கிளர்ச்சி

(மொஸ்கோ)

சோவியத்யூனியனின் ஜோர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் நெப்போலியன்

(ச. விக்னேஸ்வரன்)

மருத்துவத்துறை மாணவன்

| தாயின் மடியில்: | தாயக மண்ணில் |
|---|---|
| 29-07 1971 | 13-09-1990 |

நாளை நடைபெறும் (13-09-1991) மதிய போசனத்தில் நண்பர்கள், போராளிகள் அனைவரும் கலந்து கொள்ளவும். மாலை தாவடி திறந்த வெளி அரங்கில் நடைபெறும் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை, கலை கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும்.

"விக்னேஸ்வரா"
120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
நெப்போலியன் வீதி
தாவடி.

(R/1734)

## அரசாங்க எழுதுநர், கிராமசேவையாளர் பயிற்சிநெறிகள் விரிவுரைகள்

### ஆரம்பம்: 14-09-91 (3 மணி)

விரிவுரையாளர்கள்

திரு. க. குணராஜா
திரு. அ. குமாரவேல்

விண்ணப்பப் படிவங்களையும் விபரத் திரட்டினையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்

நிர்வாகி

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(B/3089)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
28 - 11 - 1965

வீரமரணம்
12 - 09 - 1987

முன்னைநாள் வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர்

## லெப்டினன்ட் கேணல் சந்திரன் நினைவாக நடத்தப்பெறும் கர பந்தாட்டச் சுற்றுப்போட்டி

லெப்டினன்ட் கேணல் சந்திரன் அவர்களின் ஓராண்டு நினைவாக முள்ளியவளை மறுமலர்ச்சிக் கழகத்தினரால் நடாத்தும் தமிழீழ தேசிய ரீதியிலான 4 கொண்ட விலகல் முறையிலான கர பந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பங்கள்
கிடைக்க வேண்டிய முடிவு திகதி:- 20-09-1991
போட்டிகள் 22-09-1991 இல் ஆரம்பமாகும்

இறுதிப்போட்டியும் பரிசில் வழங்கும் வைபவமும் நினைவஞ்சலிக் கூட்டமும் 23-09-1991 இல் இடம் பெறும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

தலைவர்
மறுமலர்ச்சிக் கழகம்
முள்ளியவளை

(B/3101)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 09 - 12

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலையில் உள்ள பன்குளம், துவரங்காடு, திருக்கடலூர் ஆகிய பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 67 தமிழ்ப் பொதுமக்கள்

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பு கொம்மாந்துறையில் சிறிலங்காப்படையினரின் சுற்றிவளைப்பின்

ஜியா குடியரசிலுள்ள சிறுபான்மை முஸ்லிம் மக்கள் ஜோர்ஜியாவிற்கு எதிராக ஆயுதப் போராட்டமொன்றில் இறங்கியுள்ளனர். முஸ்லிம் போராளிகளால் ஜினாபுர்ஸி நகராம் தாக்கப்பட்டதையடுத்து ஜோர்ஜியா குடியரசு தனி இராணுவம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அக்குடியரசின் தலைவர் கூறியுள்ளார்.

## பிலிமத்கோவ் அரபு நாடுகள் பயணம்

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதியின் சிறப்புப் பிரதிநிதியாக பிலிமத்கோவ் அவசர விஜயமொன்றை மேற்கொண்டு அரபு நாடுகளுக்குச் சென்றுள்ளார். சோவியத் யூனியனுக்கான அவசர நிதியுதவிகள் கோரியே பிலிமத்கோவ் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

## தங்கக்கடத்தல் பிடிபட்டது

சிங்கப்பூரிலிருந்து இந்தியன் எயர் லைன்ஸ் விமானமூலம் கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்த மூவர் தத்தமது உடலில் மறைத்து தங்கப்பாளங்களைக் கடத்தி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து 22 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டதுடன் இரண்டு கோடி இருபது இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## குடும்பப் பெண் தற்கொலை

வாழ்க்கையில் விரக்தியுற்ற இளம் குடும்பப்பெண் ஒருவர் நஞ்சருந்தித் தன்னுயிரை மாய்த்துள்ளார்.

இச்சம்பவம் புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் இந்திராணி (வயது 34) என்ற இளம் குடும்பப் பெண்ணே தற்கொலைசெய்தவராவார். 22)

## வீரவணக்கம்



### அக்கினோ

(இராசரட்ணம் கலைவாணி)

(கைதடி, நுணாவில்)

வீரவணக்கம் 08 . 09 . 91

உறுதி தளராது உறைவிடம் தேடிய
வீரப்புலி அக்கினோவே
தமிழ் மானம் காக்க
வீறு கொண்டு விழித்தவளே
களம் நோக்கிச் சென்ற
களப்புலியே
தமிழ் மண்ணுக்காக தேசத்தை
நேசித்தவளே
எதிரிகளைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்த
புதுமைப் புலியே
மண்ணையும் மக்களையும் காக்க
தேசத்தை விட்டுச் சென்ற எம்
இனியவளே உன் பாதச்சுவடுகள்
பட்ட இடமெங்கும் பசுமையாக இருக்கிறது
உன் அன்பான பேச்சினால் சகபோராளிகள்
மனதில் அழியாது இடம் பெற்றாய்
நீ விட்டுச் சென்ற பயணத்தை
நாம் தொடர்வோம்
உன் கல்லறையில் கூட நாளை
ஓர் காவியம் பிறக்கும்!

(B-3097) -நண்பர்கள்

## வீரவேங்கை ராஜேந்தர்

(ஜெகதீசன் பகீரதன்)

(காங்கேசன்துறை)

விடுதலைப் புலியணி சேர்ந்திருந்தாய் வீரனாய்
விடுதலைப் பணிகளில் முன்நின்றாய் தோழனாய்
அன்பரே ராஜேந்திரா ஆகுதியாகினாய் தேசத்தில்
துன்மர்கள் உன்னைத் துரோகமாய் அழித்தனர்
ஆண்டுகள் நான்கு ஓடின நேற்றுப் போல்
அன்று போல் இன்றும் வாழ்கின்றாய் நெஞ்சில்.

-- நண்பர்கள்,
உறவினர்கள்.

(B/3083)

## 91 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | வீர மரணம் |
|---|---|---|
| 17 |  | 17 |
| - | | - |
| 10 | | 06 |
| - | | - |
| 1975 | | 1991 |

### வீரவேங்கை கீதா

(தர்சினி திருச்செல்வம்)

கடந்த 17-06-1991 அன்று வவுனியா குருக்களூரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த எமது புதல்வியின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 15 09-91 (ஞாயிற்றுக்கிழமை) எமதில்லத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர், நண்பர்கள் எமது செல்வி கல்வி கற்ற தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பனை
தெல்லிப்பளை

பெற்றோர், சகோதரர்,
உறவினர்கள்.

(R/1735)

போது வீரமரணமெய்திய
சிறி (சிறிதரன்)

1987ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரமரணமடைந்த கிளிநொச்சி மாணவர் இயக்க பொறுப்பாளர்
இராஜேந்தர் (ஜெகதீசன் பகீரதன்-காங்கேசன்துறை)

முல்லைத்தீவு சிலாவத்தையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது இரு ஆதரவாளர்கள்.

பண்டாரிக்குளத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது வீரமரணமெய்திய
2ஆம்லெப் ராமு (மாரிமுத்து ராம்சாமி-குச்சவெளி, திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு மாங்குளத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய
நேரு (கணபதிப்பிள்ளை அழகரட்ணம் - திரியாய், திருமலை)

1990ஆம் ஆண்டு யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
சேவியர் (யூ. லைனஸ் - மன்னார்)

தம்பலவத்தையில் எதிர்பாராத விதமாக கண்ணி வெடியில் சிக்கி எமைப்பிரிந்த
லெப். றொபின் (ஐயங்கேணி, மட்டக்களப்பு)

மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலினால் வீரமரணமெய்திய
கலாபரன் (மனோஜ்குமார் - கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஒட்டமாவடி பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இரு தமிழ்ப் பெண்கள்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட எட்டுப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8098)

❀ சிந்தனைக்கு ❀

செயல் மறக்கப்படலாம்; ஆனால்,
அதன் விளைவு தொடர்கிறது.
— ஒவிட்

ஈழநாதம்

31, மங்கந்துராவீதி, யாழ்ப்பாணம், 12 09 1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5308

# சிறிலங்காவில் மீண்டும் அரசியல் வன்முறை?

தென்னிலங்கையில் மீண்டும் ஒரு தடவை அரசியலில் வன்முறை தலைதூக்குவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவிற்கு எதிரான - ஐ கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட - அதிருப்தியாளர்களின் நுகேகொடை கூட்டத்தில் நிகழ்ந்த துப்பாக்கி வேட்டுச் சத்தம் அதற்குக் கட்டியம் கூறுவதுபோல் அமைந்துள்ளது.

கடந்த காலத்தில் இலங்கையின் அரசியல் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் வன்முறையின் மூலம் தீர்வுகாண முற்பட்டதன் தொடர்ச்சியான விளைவே இதுவாகும். தமிழர் தமது அரசியல் உரிமை கோரிச் சாத்வீக ரீதியான போராட்டங்களும் ஜனநாயக வழிப் போராட்டங்களும் நடத்திய போது அதனை சிறிலங்கா அரசாங்கம் வன்முறை மூலம் முடிக்க எண்ணியது. இதன் மூலம் அரச பயங்கரவாதத்தை தமிழர் மீது கட்டவிழ்த்துவிட்டது.

இதேபோன்று தென்னிலங்கையிலும் அரசிற்கெதிரான ஜே வி பியின் போராட்டத்தை வன்முறை மூலம் இரும்புக்கரம் கொண்டு சிறிலங்கா அரசு அடக்கியது. தற்பொழுது மீண்டும் அரசியல் நெருக்கடி வன்முறை நோக்கித் திசை திருப்பப்பட்டுள்ளதுபோல் தெரிகின்றது.

இவ்விடயம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது இந்தக் கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கும், வன்முறைக்கும் யார் பொறுப்பு என்று தெரியவரவில்லை. ஆனால், இது உடன் தெரியவரப் போவதும் இல்லை.

# "கிட்டத்தட்ட இம் முற்றுகை போர்க்களம் போல காட்சியளித்தது"

பெங்களூர் ஜெயநகரை அடுத்து கனகபுரா றோட்டில் இருபதாவது கிலோ மீற்றரில் உள்ள அடர்ந்த சவுக்கு மரங்கள் நிறைந்த ஒரு தனியார் பிரண்டி பாக்டரிக்குப் பின்புறம் அமைந்துள்ளது கோனனகுண்டா. இந்தக் கிராமத்திலேயே சிவராசன், சுபாவுக்கு எதிராக பெரும்போர் ஒன்றை விசேட புலனாய்வுப் பிரிவினர் நடத்தினர்.

ஓகஸ்ட் 18 ஆம் திகதி ரகசிய தகவல்களைக் கொண்டு ரகசிய பொலிசார் கோனனகுண்டாவில் சிவராசன், சுபா இருந்த வீட்டினைக் கண்காணிக்க ஆரம்பித்தார்கள். சுற்றிலும் உள்ள வீடுகளிலும் அங்கே தங்கியிருப்பவர்களைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார்கள். அப்போது வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. எப்போதும் கதவு மூடியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள் பின்னர். பொலீசுக்கு செய்தி உறுதி ஆனதும் துப்பாக்கி ஏந்திய பொலிசார் அந்த வீட்டைச் சுற்றிலும் குவிக்கப்பட்டனர்.

தகவல்கள் நிச்சயம் செய்யப்பட்ட பின்னரும் 36 மணித்தியாலங்களுக்குமேலாக அவர்களை உயிருடன் பிடிக்க உருப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வெறுமனே காலத்தை வீண் அடித்தனர் இந்திய உளவுத் துறையினர்.

வீடே நிசப்தமாய் இருந்தது. ஜன்னல்கள், கதவுகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. டெல்லியிலிருந்து சி. பி ஐ. ஆணையாளர் விஜய்கரன் அங்கே வந்து சேர்ந்த நேரம் சூரிய வெளிச்சம் குறைய ஆரம்பித்தது.

இருள்சூழ்ந்தால் விடுதலைப் புலிகள் துப்பாக்கிகளையும் வெடிகுண்டுகளையும் பயன்படுத்தித் தப்ப முயற்சிக்கலாம் என்று உடனடியாக அந்த வீட்டைச் சுற்றிலும் 'போகஸ்' விளக்குகள் கட்டப்பட்டன. அந்தப் பகுதி முழுக்க இரவைப் பகலாக்கியிருந்தனர் பொலிஸ் எந்த நேரமும் குறிப்பிட்ட அந்த வீட்டிற்குள் நுழையலாம் என்ற எதிர்பார்ப்பு ஆனால் விடுதலைப் புலிகள் வீட்டுக்குள்ளிருந்தபடி சரமாரியாகச் சுட ஆரம்பித்தார்கள். அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து பின்பக்கம் அறுபது அடி தூரத்தில் ஒரு வீட்டில் சி பி. ஐ அதிகாரிகள் சிலர் இருந்து கண்காணித்ததை எப்படியோ அறிந்து அந்த வீட்டை குறி பார்த்துச் சுட்டனர்.

தடைந்தபோது கூட உடனடி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை ஆனால் கரும் பூனைகள் என அழைக்கப்படும் தேசிய பாதுகாப்புப் படையினர் வீட்டைச் சுற்றி அப்போது நிறுத்தப்பட்டிருந்தனர்.

இந்திய உள்துறை அமைச்சர் வரை விவகாரம் சென்ற பின்னர் தான் நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்.

இந்திய பத்திரிகைகள் இவ்வாறு எல்லாம் பெங்களூர் நடவடிக்கை பற்றி விமர்சனம் செய்துள்ளது

ஒரு மூடப்பட்ட டிரக் தமது வீட்டருகே வந்து நின்றபோது கமாண்டோக்கள்தான் வந்துவிட்டார்கள் என்று தீர்மானித்து விட்ட சிவராசன், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார். வெளியில் நின்ற பொலிசாரோ சிவராசனை மீட்டுச் செல்லப் புலிகள்தான் வந்துவிட்டனரோ எனப் பயந்துவிட்டனர். இந்த சந்தேகம்தான் துப்பாக்கிச் சமரைத் தோற்றுவித்தது.

> ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த சிவராசன், சுபா ஆகிய இருவரையும் விசேட புலனாய்வுப் பிரிவினர் உயிருடன் பிடிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து புரொண்ட்லைன், ஜூனியர். விகடன் ஆகியவற்றில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு இங்கே தரப்படுகிறது.

தனி விமானத்தில் பெங்களூர் வந்தனர்.

வந்த அதிரடிப் படையினர் குண்டு துளைக்காத உடைகள் அணிந்து தாக்குதலுக்குத் தயாரானார்கள்.

அம்புலன்ஸ் வீட்டிற்கு அருகே கொண்டு வந்து நிறுத்தப்பட்டன. பெங்களூரில் உள்ள விக்டோரியா. பெளரிங், ஜான்சன் மருத்துவமனைகள் தயார்படுத்தப்பட்டன மருத்துவர்களையும் தயார் நிலையில் வைத்திருந்தார்கள்.

அதிரடிப்படையினர் அருகில் இருந்த ஒரு கட்டடத்துக்கு மேல் சென்று தாக்குதலுக்கு வசதியாகத் தங்களுடைய இயந்திரத் துப்பாக்கிகளையும், குண்டுகளையும் தயார்ப் படுத்திக் கொண்டு தீயணைப்பு வண்டி ஏணி ஒன்றின் உதவியுடன் புலிகள் இருந்த வீட்டின் மாடிக்குத் தாவினார்கள்.

பின்பு அதிரடிப்படையினர் மூன்று பிரிவுகளாக ஒருவர் மாடியில் இருந்த கதவின் அருகிலும், இரண்டு பிரிவினர் முன் பக்கம் பின்பக்கம் ஆகிய கதவுகளின் அருகிலும் நின்றார்கள்.

மூன்று கதவுகளிலும் பிளாஸ்டிக்குண்டுகள் பொருத்தப்பட்டு ஒரே நேரத்தில் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டன உள்ளிருந்து பதில் தாக்குதல் ஏதுமில்லை மாடியின் மீதிருந்த ஒரு கமாண்டோ திடீரென்று உள்ளே

இது தொடர்பாகப் பரஸ்பர குற்றச்சாட்டுகளும், மறுப்புகளும் எழத்தான் போகின்றன. சிறிலங்காவில் ''ஜனநாயக அமைப்பினுள்'' தவிர்க்க முடியாமல் வன்முறை புகுந்துள்ளது என்பதை மாத்திரம் எவரும் மறுக்க முடியாது.

மேலும், இந்த அரசியல் நெருக்கடி வலுவடையுமானால்- அநேகமாக வலுவடைவதற்கான சூழ்நிலையேயுள்ளது - கடந்த காலங்களில் நிகழ்ந்த அரசியல் வன்முறைகள் போல அல்லாமல் மாறுபட்டதாக இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

கடந்தகால அரசியல் வன்முறையில் சிறிலங்காவில் இராணுவத்தினரும் (சிறுதொகை அற்றும்), ஆயுதம் தாங்கிய அரசாங்க எதிர்க் குழுவினருமே மோதினர். அதில் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களில் அப்பாவிகளும் அடங்குவர். அதேவேளை இம்முறை மோதல்கள் வலுவடையுமாயின் முன்னைப்போல அல்லாமல் சிங்கள மக்கள் குழுக்களாகப் பிரிந்தே மோதிக்கொள்ளும் நிலை உருவாகலாம். இவை பெரும் கலவரங்களாகக்கூட உருவாகலாம்.

அடுத்ததாக இம்முறை அவற்றில் பெரும்பாலானவை கொழும்புப் பகுதியிலேயே இடம்பெறக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன. சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும், எதிரணியின் முக்கியமானவரான லலித்தும் மேல் மாகாணத்தை குறிப்பாக கொழும்பையே தளமாகக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்காரணமாக இவ்விவகாரம் பூதாகாரமான வடிவம் பெற்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் தாக்கங்களை விளைவிக்கும்.

மேலும் இந்நெருக்கடியில் ஆயுதப்படையின் முழு ஆதரவும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எப்பொழுதும் இருக்கும் என்றும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. முன்னரே இராணுவ அதிகாரிகள் சிலர் அதிருப்தியாளர்களுடன் தொடர்புகொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. ஆகையினால் குழப்பகரமான நிலை ஆயுதப்படையினரிடையேயும் வலுவடைவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் உண்டு.

இவ்வாறான நிலையில் இம்முறை உருவாகி வரும் அரசியல் வன்முறையில் சில முக்கிய அரசியல் தலைவர்களின் தலைகள் உருண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தற்பொழுது சிறிலங்கா ஜனாதிபதியால் பேசப்படும் கொலைகளுக்கான திட்டங்கள் எந்தளவிற்கு உண்மை பொய் எனத்தெரியாவிடினும் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறாது எனக்கூறிவிடவும் முடியாது. ஆனால் இவை உடன் நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் உண்டா இல்லையா என்பதைவிட இவற்றை மேற்கொள்ளக் கூடிய பணபலம் பின்னணிப்பலம் என்பன இரு பகுதியினருக்கும் உண்டு. இதற்கு ஒவ்வொருவருடைய உள்வீட்டு இரகசியங்களும் இரு பகுதியினருக்கும் போதியளவில் தெரிந்திருப்பதும் உதவலாம்.

இதனால் தென்னிலங்கை அரசியலில் திடீர் மாற்றங்களும், திடீர் திருப்பங்களும் எப்பொழுது ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் தாங்கள் உருவாக்கிய அரசியல் வழிமுறைகளுக்கு தாங்களே பலியாவது தவிர்க்க முடியாதது ஆகி விடும்.

வீடொன்றில் மறைந்திருக்கும் சில தீவிரவாதிகளைப் பிடிக்க குறிப்பிட்ட ஒரு தொகைபொலிசாரே போதும் ஆனால் இரண்டாயிரத்துக்கும் அதிகமான பொலிசார் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர் இவர்களும் வீட்டைச்சுற்றிக்காவல் இருந்தனரே தவிர எந்த நடவடிக்கையும்எடுக்க முன்வரவில்லை

இந்தப்பகுதி முழுவதும் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் பொலிஸ் குத்தகைக்கு எடுத்துக்கொண்டது போல் இருந்தது. அடுத்த நாள் காலையில் இருந்தே சந்தேகப்படும்படியானவர்களையோ, கார் போன்ற வாகனங்களையோ அந்தப்பக்கம் விடவில்லை.

இந்த முற்றுகை குறித்து பத்திரிகையாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கும்போது ''கிட்டத்தட்ட ஒரு போர்க்களம் போல் இந்த முற்றுகை இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

எங்கு பார்த்தாலும் துப்பாக்கியேந்திய பொலிஸ்காரர்கள் அந்தவீட்டிற்கு எதிரில் இருக்கும் வீட்டில் ரகசிய பொலிசார் சிலர் உள்ளேயும், வெளியேயும் நின்று கண்காணித்தபடி இருந்தனர். சிவராசன், சுபா இருந்ததென்ற பொலிசார் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லைப் போலும். சில நிமிடங்கள் செய்வதறியாது செயல் இழந்து நின்றனர். பின்னர் தாமதமாகவே பதில் தாக்குதலை நடத்தினர். சிவராசன் சுடுவதை நிறுத்திக்கொண்டதும் பொலிசாரும் தமது தாக்குதலை நிறுத்தி விட்டனர். காலை கமாண்டோக்கள் வீட்டைத் தகர்த்து உள்ளே நுழைந்து முதல்நாளே இறந்து போனவர்களின் உடலங்களைக் கைப்பற்றும் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோனனகுண்டாவில் சிவராசன் மறைந்திருக்கும் தகவல் கிடைத்ததும் பெங்களூர் பொலிசார் எஸ் ஐ டி என்று அழைக்கப்படும் விசேட புலனாய்வுக் குழுவிற்கு அந்த விபரத்தைத் தெரிவித்தனர். இக்குழுவின் தலைவரான கார்த்திகேயன் உடனடியாகச் செயற்பட்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை அரசியல் காரணங்களினாலேயோ என்னவோ அவர் சுயமாக நடவடிக்கை எடுக்காமல் தமது மேலாளரான சி.பி.ஐ பணிப்பாளர் விஜய்கரணிடம் பொறுப்பினை ஒப்படைத்தார். விஜய்கரன் பெங்களூர் வந்

ஆனால் பொலிசார் சும்மா இருக்காமல்திடீர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பார்களானால் சில சமயம் சிவராசன், சுபாவை உயிருடன் பிடித்திருக்க முடியும்.

திடீரென்று இருதரப்பிலும் துப்பாக்கியால் சுட்டுக்கொள்வது நின்றது. பின்னர் பத்து நிமிடங்கள் கழித்து மீண்டும் புலிகள் சுட்டனர்.

மீண்டும் புலிகள் தரப்பில் துப்பாக்கியால் சுடுவது நின்றது. பயங்கர அமைதி அவ்விடத்தில்நிலவியது. பொலிஸ் உயர் அதிகாரிகள் ''அடுத்து என்ன செய்வது?'' என்று அடிக்கடி சந்தித்துக் கதைத்துக் கொண்டார்கள் இந்தப் பரபரப்பு நள்ளிரவு வரை நீடித்தது. இந்த நேரம் விசேட கமாண்டோ அதிரடிப்படையினர் டெல்லியில் இருந்து வருவதாக பொலிஸ் அதிகாரிகளுக்குத் தகவல் வந்தது.

இதே நேரம் 'சயனைட்' அருந்தினால் அதை முறியடிப்பதற்காக குவாலியரிலிருந்து சக்தி வாய்ந்த மருந்துகளும், வந்தன டாக்டர்களும் தனி விமானம் மூலம் அதிகாலையில் குறிப்பிட்ட இடத்திற்கு வந்திருந்தனர்.

விசேட கமாண்டோ படையினரும் அதிகாலை 4-30 மணிக்கு டெல்லியிலிருந்து [illegible] குதித்தார். வெளியில் ஆயிரக்கணக்கான காவலர்களும் உயர்பொலிஸ் அதிகாரிகளும் படபடக்கக் காத்திருந்தனர்.

கமாண்டோ வீரர் சைகை செய்ய உயர் அதிகாரிகள் மட்டும் வீட்டுக்குள் நுழைந்தனர். அங்கே சிவராசன், சுபா உட்பட ஏழு பேர் இறந்து காணப்பட்டனர் சிவராசன் தன்னுடைய வலது நெற்றியில் தன்னைத்தானே சுட்டும், மற்றைய ஆறுபேரும் சயனைட் அருந்தியும் உயிர் இழந்துள்ளனர். இதில் இரண்டு பெண்களும் அடங்கியிருந்தனர்.

கத்தியால் தன்னைத்தானே குத்திக்கொண்டு இறப்பதும், தலையில் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு உயிர் விடுவதும் வீரமரணங்களாகவே உலகெங்கும் கணிக்கப்படுகிறது.

புலிகளும் தியாகிகளுக்கு எப்போதுமே கௌரவமளித்து வந்திருக்கின்றனர். தலையில் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு வீரமரணமடைந்த சிவராசனை அவர்கள் தமது வீரத்தியாகிகள் பட்டியலில் சேர்த்துக் கொண்டாடுவர் என்பதை சிவராசன் அறிந்து வைத்திருந்தார் என்பது நிச்சயம்.

## கிரிக்கட் போட்டிகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

கரும்புலி லெப்டினன்கேணல் போர் வெற்றிக் கிண்ணத்திற்கான 11 பேர்டி கொண்ட 20 ஓவர் மென்பந்து நொக்கவுட் கிரிக்கெட் போட்டிகள் சனிக்கிழமை 14 ஆம்திகதியும் ஞாயிற்றுக் கிழமை15 ஆம் திகதியும் நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறும். இப்போட்டிகள் யாவும் எக்காரணம் கொண்டும் பின்போடப்பட மாட்டாதென்று நொதேண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆசிரியர் அறிவித்துள்ளார்.

## மேற்கு உதவாவிடில் மீண்டும் புரட்சி ஏற்படலாம்

-பொறிஸ் யெல்சின்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் இப்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க மேலை நாடுகள் மனிதாபிமான மற்றும் நிதியுதவிகள் அளிக்க முன்வராவிட்டால் நாட்டில் மீண்டும் ஒரு திடீர்ப் புரட்சி ஏற்படக் கூடுமென்று ரஷ்யக் குடியரசுத் தலைவர் பொறிஸ் யெல்சின் எச்சரித்துள்ளார் மேலை நாட்டு தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் மேலும் வளர்ந்த நாடுகளிடமிருந்து கிடைக்கும் உதவி கம்யூனிஸ்ட் கட்சி கடும் கோட்பாட்டாளர்களிடமிருந்து எழும்பும் சவால்களை தடுக்க உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சுதந்திரப் பிரகடனம் செய்த பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லித்துவேனியக் குடியரசிலிருந்து சோவியத் துருப்புகள் வாபஸ் பெறப்படத் தொடங்கியுள்ளன.

## வெளியேற்றப்பட்டார்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம் வழுதி நேற்று முன்தினம்ரண்டாவதுநாளாக சட்டப் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டார். இச்சட்டப் பேரவையின் எஞ்சிய நாட்களின் நடவடிக்கைகளில் அவர் கலந்து கொள்ளக் கூடாது என்றும் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து இ. கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் உட்படமேலும் சிலசட்டப்பேரவைஉறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

# தாயக விடுதலைப் போராட்டம் உன்னதமானது நியாயமானது

- ஞானம்

(வவுனியா)

எமது தாயக விடுதலைப் போராட்டம் நியாயமானது; உன்னதமானது. இதனால் தான் பல போராளிகள் களத்தில் இறங்கி தம் உயிரைத் தியாகம் செய்யத் தயாராகி விடுகிறார்கள்.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வீரமரணமடைந்த லெப்ரினன்ட்ராம்ராஜ், லெப்ரினன்ட் பூட்டோ ஆகிய போராளிகளின்புகழுடம்புகள் கடந்த 10 ஆம் திகதி ஈச்சங்குளம் மாவீரர் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஞானம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிரிப்படைக்கு எதிராக போராடுவதன்மூலமே இழந்த எமது மண்ணை மீட்க முடியும்.

இந்த மண்ணில் நடக்கும் எதிரிக்கு எதிரான போரில் அனைத்து மக்களுக்கும் பொறுப்புண்டு என்று அவர் அங்கு இரங்கல் உரையாற்றும் போதுமேலும் தெரிவித்தார்.

(தி)

## பிரதான வீதியால் செல்லலாம் என்பது தவறு

(வவுனியா)

வடபகுதிப் பயணிகள் யாழ் வவுனியா பிரதான வீதி வழியாக வவுனியா நகரப் பகுதியை நோக்கிச் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது என்று வெளிவரும் செய்திகள் உண்மைக்கு மாறானவை

கடந்த 9ஆம் திகதி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நொச்சிமோட்டை பகுதியிலிருந்து மேற்படி பிரதான வீதியூடாகச் செல்வதற்கு முயன்ற போது பயணிகள் அனைவரும் இராணுவத்தினரால் விரட்டி அடிக்கப்பட்டனர்.

வழமைபோலவே பயணிகள் வயல்வெளி, பற்றைக்காடுகள் சிற்றாறுகளைத் தாண்டியே வவுனியா நகரம் செல்கின்றனர்.

(தி

ஐ. நா. பாதுகாப்புச்சபை

## நிரந்தர உறுப்பு நாடுகள் ஈராக்கிற்கு எச்சரிக்கை

ஈராக்கிலுள்ள ரகசிய ஆயுதக் கிடங்குகளைத்தேடி ஐ. நா. சபையின் ஹெலிகொப்டர்கள் பறப்பதற்கு அனுமதிக்காவிடில் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்று ஐ நா.பாதுகாப்புச் சபையின் ஐந்து உறுப்பு நாடுகளும் ஈராக்கை எச்சரித்துள்ளன.

சோவியத்தின்நிரந்தர பிரதிநிதி யூலி வன்ருசோ வாஷிங்டனில்செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது ஈராக் ஒத்துழைக்கா விட்டால் நிலைமை மோசமாகும் என்று தெரிவித்தார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## ஆந்திராவில் ஒருவர் பலி

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் சுண்டூர் கிராமத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டிற்கு ஒருவர் பலியாகினார்.

கடந்த மாதம் சுண்டூர் கிராமத்தில் செடுல் வகுப்பைச் சேர்ந்த எட்டுப் பேர் கொல்லப் பட்டதை ஆட்சேபித்து உண்ணாவிரதம் இருந்துவரும் சிலரை அதை நிறுத்தும்படி கேட்க வந்த பொலிஸார் சூட்டிலேயே ஒருவர் கொல்லப் பட்டார்.

தம்மீது கல் வீச்சு நடத்தப் பட்டதாலேயே தாம் அவர்களைச் சுட்டதாக பொலிஸார்

## தடகள போட்டி கலந்துரையாடல்

தியாகி திலீபன் நினைவு தடகள விழாவில் மாவட்ட மட்டப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, யாழ் மாவட்ட செயலகம், கோண்டாவிலில் 14-09-91 காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. சகல விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ராஜீவ் கொலை தொடர்பாக

## ஒன்பது இலங்கையர் உட்பட பதினாறு பேர் கைது

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்துவரும் சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்பது இலங்கைத் தமிழர்கள் உட்பட பதினாறு பேரை இதுவரை கைது செய்துள்ளது என்றுமத்தியஉள்துறைஇணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

நேற்று மாநிலங்கள் அவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் ஜேக்கப் இதனைத் தெரிவித்தார்.

400 பேர் விசாரிக்கப்பட்டனர் என்றும் 52 இடங்கள் சோதனையிடப்பட்டன என்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் ஜேக்கப் தெரிவித்தார்.

## கொழும்பில் புலனாய்வுக் குழு

இந்தியப் புலனாய்வு அதிகாரிகளின் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது. இந்தக் குழுவிற்குத் தமிழகப் புலனாய்வு அதிகாரி எஸ்.யமுனா தலைமை தாங்குகிறார் என்று லங்கா புவத் கூறியுள்ளது.

தியாகி திலீபன் ஞாபகார்த்த

## பாடசாலைகளுக்கு இடையில் கரபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே கரபந்தாட்ட வலைப்பந்தாட்டப்போட்டிகளை வி. பு. மாணவர் இயக்கம் நடாத்தவுள்ளது.

இப் போட்டிகளில் பங்குபற்றும்பாடசாலைகள்தமது பெயர்ப் பட்டியல்களை குழு வீரர்களது கையொப்பங்களுடனும் அதிபரின் உறுதியுரையுடனும் அவ்வக் கோட்டக் கல்வி அலுவலகங்களில் இன்றைய தினம் ஒப்படைக்குமாறு கேடகப்பட்டுள்ளது. வெற்றி பெறும் குழுக்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மு)

## 'இனி ஒரு விதி' நிதர்சன வெளியீடு

(நமது நிருபர்)

'இனி ஒரு விதி' குறும்பட வெளியீட்டு விழா நேற்று மாலை நிதர்சனம் அலுவலகத்தில் இருக்கும் அமலன் அரங்கில் இடம்பெற்றது. நிதர்சனம் பொறுப்பாளர் திரு. இ. பரதன்தலைமையில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

[illegible]

யையடுத்துபடக்காட்சிதொடர்ந்ததுகலை பண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர்புதுவை இரத்தினதுரை, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோகி, பேராசிரியர் சிவத்தம்பி, விரிவுரையாளர் ஏ. ஜே. கனகரத்தினா, திரு. யேசுராசா ஆகியோர் மதிப்பீட்டு உரை நிகழ்த்தினர்.

## ஆதரவு இல்லை

அமெரிக்க இராணுவத்தளம் தொடர்ந்தும் பிலிப்பைன்ஸில் இருக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரசோன் அக்கினோவ் நடத்திய பேரணிக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

ஐந்து லட்சம் பேர் கலந்து கொள்வர் என அரசு எதிர்பார்த்த போதும் சுமார் எழுபதாயிரம் பேரே இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

மணலாறு

★ காயத்திரி (இரத்தினம் இந்திராதேவி, 7 ஆம் குறிச்சி, அக்கரைப்பற்று அம்பாறை)

★ அரசன் (செல்லத்தம்பி பரமேஸ்வரன், கின்னியடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு)

★ கலையரசன் அல்லது மிதுலன் (குமாரசிங்கம் குண



## வீரவேங்கை குணேஸ்

(ஜெயக்கிளி ஜெகநாதன்)

| வீரஜன்னம் | வீரமரணம் |
|---|---|
| 04 . 03 . 1972 | 13 . 09 . 1990 |

ஓ ..... குணேஸ்!
ஓராயிரம் முறை
உன் நாமத்தைக்
கூறுகிறோம்
உறுதியடைகிறது
எமது நெஞ்சுகளும்

உன் நிஜத்தை இழந்தும்...
உன் நினைவோடு
நாம் உயிராகி
ஓராண்டாகிறதே!

கல்லறைக்குள் நீ
காவியம் ஆக
இந்த
அண்டவெளியில்

உன் உருவத்தைத் தேடி
நாம்
துவண்டது உண்மைதான்

ஆனால்
உன் பின்னால்
உருப்பெற்றிருக்கும்
எண்ணிலாக் கல்லறைகள்
எம் கண்ணீரைத்
துடைக்கின்றன!

மலரும் புதுப் பூமியில்
வீசுங்காற்றில்
நீயும் உலா வருவாய்...
என்பதறிகாய்
காத்திருக்கின்றோம்.

காங்கேசன்துறை.

குடும்பத்தினர்

(B-3100)

ளைச் சுட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### நுகேகொட

டுள்ளது இந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து கொழும்பில் இனம்புரியாத பதற்றம் நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

### இறந்த

ந்த சமயம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதாகவும் இத்தாக்குதலிலேயே இவ் இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

### வாக்குறுதி

காவிற்கு தோட்டத் தொழிலாளர் ஆதரவு அளித்து வந்துள்ளனர். இவ் ஆதரவு முன்போல் தொடர்ந்தும் இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

### புலிகளுக்கு

அதேவேளை மதுரையில் புலிகள் அமைப்பிற்கு ஆதரவாகக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டத்தை நடத்திய மற்றும் தீவிரமாகச் செயற்பட்ட மேலும் பதினெட்டுப் பேரும் விரைவில் பிடிக்கப் பட்டு விடுவார்கள் என்று மதுரை பொலிஸ் ஆணையாளர் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் சுவரொட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் (பேபி சுப்பிரமணியன்) வெளியீட்டு உரை

### தியாகி திலீபன் தடகள

# வன்னி மாவட்ட போட்டி நிலையங்கள் அறிவிப்பு

தியாகி திலீபனின் நினைவாக முல்லைத்தீவு மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டிகள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மாங்குளம் ஆகிய நிர்வாகப் பிரதேசங்களுக்கிடையில் இடம்பெறவுள்ளது.

இவற்றில் நெடுந்தூர மிதிவண்டி ஓட்டப் போட்டி முள்ளியவளையில் ஆரம்பித்து ஒட்டுசுட்டான், மாங்குளம், கிளிநொச்சி பரந்தன் ஊடாக புதுக்குடியிருப்பை வந்தடையும் என்றும் பெண்களுக்கான மிதிவண்டி ஓட்டப்போட்டி தச்சடம்பனில் ஆரம்பித்து முள்ளியவளையை வந்தடையும் என்றும் மாட்டுவண்டிச் சவாரி புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும், கரபந்தாட்டம் ஒலுமடுவிலும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் ஒட்டுசுட்டானிலும் உதைபந்தாட்டம், மென்பந்து துடுப்பாட்டம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் சுவட்டு மைதான நிகழ்ச்சிகள் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும்என்றும் முல்லைத்தீவு மாவட்ட திலீபன் ஞாபகார்த்த விளையாட்டுக் ஒழுங்கமைப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டுக்கள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர் (58)

யேசுராசா ஆகியோர் மதிப்பிட்டு உரை நிகழ்த்தினர். இதனையடுத்து பார்வையாளர்கள் பங்கேற்ற கலந்துரையாடலும் இடம் பெற்றது.

லன் (குமாரசிங்கம் குணரஞ்சன், செக்கட்டிப் புலவு, வவுனியா)

10 - 09 - 91 அன்று நடந்த மோதலில் மூன்று போராளிகள் வீரமரணமடைந்தனர்.

★ வாசு (இராசலிங்கம் ஜெயராஜ், ஞானரஞ்சித், கரவெட்டி மேற்கு, நெல்லியடி)

★ ஜெகதீஸ் (பெருமாள் தங்கராசா, அப்பனைக் கொம்பனிக்கருகாமை, ஊற்றுக்குளம், கிளிநொச்சி)

★ மேகன் (ஜெகநாதன் நிர்மலநாதன், உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு)

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர்-

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 - 12 - 1925 |  | 13 - 08 - 1991 |

## திரு. மனுவேல்பிள்ளை அகஸ்ரின்

ஊர் சிறக்க உழைத்த உத்தமரே!
உமது கம்பீரத் தன்மையை
காலும் இன்றி காலன் பறித்து விட்டானே!!

உமது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
சகோதரிகள், உறவினர், நண்பர்கள்.

37, வினாசித்தம்பி வீதி,
சாவகச்சேரி.

(B-3093)

## எழுதுவினைஞர் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் பெண் எழுதுவினைஞர் தேவை. ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்தவர்களும், அனுபவம் உள்ளவர்களும், 24 - 30 வயதுக்குட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். 13ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரியில் உள்ள அலுவலகங்களில் நேரடியாக முழுவிபரத்துடனும் விண்ணப்பிக்கவும்.

விக்னா கல்வி நிலையம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

The College of Higher Studies
Anaipanthi,
Jaffna.

[B/3112]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.